# நாலடியாரில் பெண் கட்டமைப்பு

*முனைவர் ஜெ. சந்திரகலா*
உதவிப்பேராசிரியர், தமிழியல்துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: செப்டம்பர்

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-5217

தமிழர்களின் வாழ்வியலை விளக்கும் வகையில் இலக்கியங்கள் பல்வேறு காலக்கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு அவை யாவும் மனித வாழ்க்கையை நெறிப்படுத்தி அவர்களின் வாழ்வைச் செழுமையடையச் செய்கின்றன. சங்ககால மக்கள் போரையும் காதலையும் இரண்டு கண்களாகக் கொண்டு வாழ்ந்தனர் என்பதை சங்க இலக்கியங்கள் மூலம் அறியலாம். அதற்குப் பிறகு தோன்றிய காலகட்டமாகிய சங்கம் மருவிய காலத்தில் சங்க இலக்கியப் பாடுபொருள் முற்றிலுமாக மாறுபட்டு இருப்பதைக் காண முடிகிறது.

நாலடியார் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று மூன்று பகுப்புகளை உடையது. அறத்துப்பால் இல்லறவியல், துறவறவியல் என இரண்டு இயல்களையும் 13 அதிகாரங்களையும் கொண்டது. பொருட்பால் அரசியல், நட்பியல், இன்பவியல், துன்பவியல், பொதுவியல், பகையியல், பன்னெறியியல் என 7 இயல்களையும் 24 அதிகாரங்களையும் கொண்டது. காமத்துப்பால் துன்பவியல், இன்பவியல் என இரண்டு இயல்களையும் மூன்று அதிகாரங்களையும் கொண்டு அமைந்துள்ளது. இந்நூல் "வேளாண்வேதம், நாலடிநானூறு" என்றும் அழைக்கப்படுகிறது. திருக்குறளுக்கு அடுத்த நிலையில் புகழ்பெற்ற நூலாக நாலடியார் திகழ்கின்றது. பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள ஒரே தொகைநூல் நாலடியார். இந்நூலைத் தொகுத்தவர் பதுமனார்.

நாலடியாரில் சமணசமயக் கருத்துக்கள் பல்வேறு இடங்களில் இடம்பெறுகின்றன. நிலையாமைக் கருத்துக்கள் பல பாடல்களில் காணமுடிகின்றன. அறத்தைப் பற்றிய கருத்துக்கள் நிறைந்து காணப்படுகின்றன. இவற்றிற்கிடையே பெண் எப்படி இருக்க வேண்டும் என்ற கட்டமைப்பும் இந்நூல் விளக்குகிறது. இவற்றை விளக்குவதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

கட்டமைப்பு என்ற கோட்பாடு மேலைநாடுகளில் தோன்றியது. அவை அமைப்பியல் என்ற சொல்லாலும் கையாளப்பட்டு வருகின்றன. ஆங்கிலத்தில் அதனை Structuralism என்று அழைப்பர்.

கட்டமைப்பு என்பதற்கு “அமைப்புமுறை” என்று மெய்யப்பன் தமிழ் அகராதி பொருள் தருகின்றது.(ப.273) கட்டமைப்பு பற்றி பால்ஸ் அகராதி calf, castellan, cob web, compages, constitute, structure.

calf - புத்தகக் கட்டமைப்புக்குப் பயன்படும் கன்றின் பதனிட்ட தோல்

castellan - அரண்மனை ஆட்சியாளர்

cob web- சிலந்திவலை, ஒட்டடை, மாயவலை, நொய்தான கட்டமைப்புப் பொருள், சிலந்தி வலைப்பின்னல், சிலந்தி வலைப் போன்ற.

compages - சிக்கல் வாய்ந்த அமைப்பு

constitute - ஏற்படுத்து, அமை, நிறுவு, இரு, நியமி, இணைந்து உருவாக்கும் ஆற்றல் கொண்ட, ஆக்கக்கூறான, இயற்கையான உடல் கட்டமைப்பு, யாக்கை, மனநிலை அமைப்பு, அரசியலமைப்பு, இயல்பான உடல் மன ஆக்க நலத்துக்குரிய

structure - அமைப்புமுறை, கட்டமைக்கப் பெற்ற ஒன்று என்று குறிப்பிட்டுள்ளது. (ப.430)

கட்டமைப்பைப் பற்றி செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி கூறுகின்றது.

1. அமைப்புமுறை - (structure, construction) இதன் கட்டமைப்பு நன்றாக உள்ளது.
2. புத்தகம்கட்டும்செய்முறை-(Bookbinding) இந்த புத்தகத்தின் கட்டமைப்புச் சரியில்லை (ப.57) என்று விளக்குகிறது.

மேற்கூறிய கருத்தைப் போன்று க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி பொருள் கூறுகிறது. அவை,

1. அமைப்பு முறை (structure, construction) - வீட்டின் கட்டமைப்பு, உள்நாட்டுப் பொருளாதாரக் கட்டமைப்பு.
2. தாள்களை ஒன்றாகச் சேர்த்துப் புத்தகம் போன்ற தொகுப்பாகக் கட்டும் முறை (binding) - கட்டமைப்பு சரி இல்லாததால் புத்தகம் தாள்தாளாக வந்துவிட்டது என விளக்கியுள்ளதை அறிய முடிகிறது.

அமைப்பு என்பதற்கு வாழ்வியற் களஞ்சியம், ஒன்று சேர்ந்து ஒரு வடிவத்தை உருவாக்குவதனைக் குறிப்பிடுகின்றது. அமைப்புகளை (structures) மொழியின் முழு வடிவமாகவும் தனித்தனிக் கூறுகளாகவும் பகுத்தாராயலாம் என்று குறிப்பிட்டுள்ளது. (ப.490)

கட்டமைப்பு என்பது அமைப்பு என்ற சொல்லால் கையாளப்பட்டமையும் அவை இரண்டும் ஒன்றுதான் என்பதையும் அகராதி விளக்கங்களைக் கொண்டு அறிய முடிகின்றது.

அமைப்பியலைப் பற்றி தமிழவன் மொழியியல் அமைப்பியல், மானிடவியல் அமைப்பியல், மார்க்சிய அமைப்பியல், இலக்கிய அமைப்பியல் என்ற நிலைகளில் பிரித்துக் கையாண்டுள்ளார்.

**இலக்கிய அமைப்பியலைப் பற்றி,**

“இன்று அமைப்பியல் சிந்தனை மிகவும் பரந்து வேர்விட்டு உலக இலக்கியவாதிகள் மத்தியில் கலவரத்தையும் குதூகலத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அமைப்பியலின் சிந்தனை முறையிலேயே மிகவும் பரபரப்பைத் தந்தது. இலக்கிய அமைப்பியல் தான்[1]” என்று தமிழவன் குறிப்பிட்டுள்ளார்.

**கட்டமைப்பைப் பற்றி ஆ. ஆலிஸ்,**

கவிதை, நாடகம், சிறுகதை, நாவல் என்று இலக்கிய வகைகள் பலவாக வேறுபடினும் அவற்றுள் பேசப்படும் கருத்துக்களை, இயற்கை, காதல், சமயம், அரசியல் போன்ற சிலவற்றுள் அடக்கிக் காண முடியும். இவற்றுள்ளும் ஏதாவது ஒரு இலக்கிய வகையில், சான்றாக, சங்கப் பாடல்களில் பேசப்படும் கருத்துக்கள் குறிப்பிட்ட சிலவாகவே திரும்பத் திரும்பப் பேசப்படுவதைக் காணலாம். “காதல்” என்ற ஒரே கருத்தைப் பாடுபொருளாகக் கொண்ட கவிதைகளில் அங்குப் பேசப்படும் கருத்து மட்டுமின்றி வடிவமும்

திரும்பத் திரும்ப ஒன்றுபோல் அமைவதை உணரலாம். வெவ்வேறு புலவர்களால் கவிதைகள் படைக்கப்படினும் அவர்களது நடை காரணமாக அமையும் வேறுபாடுகள் தவிர கவிதைகள் ஒரு பொது அமைப்பைப் பார்க்க முடிகிறது. அவ்வமைப்பில் அடங்கும் கூறுகளே அக்குறிப்பிட்ட இலக்கிய வகையின் கட்டமைப்பாகும் எனக் கூறுவது குறிப்பிடத்தக்கது.

அற இலக்கியங்கள் குறிப்பாக நாலடியார் பல்வேறு புலவர்களால் படைக்கப் பட்டிருப்பினும் அவர்கள் வகுத்துள்ள பெண்கள் குறித்த கட்டமைப்பு, ஒரு பொது அமைப்பில் அமைந்திருப்பதை நோக்க முடிகின்றது. இவ்வமைப்பை நாலடியார் பாடல்களின் கட்டமைப்பாக கொள்ளலாம். இவற்றின் அடிப்படையில் நாலடியாரில் பெண்களுக்கு அமைந்துள்ள இல்லறப் பணிகள், கட்டுப்பாடுகள் குறித்த கட்டமைப்பு முறைகளை விளக்கும் வகையில் இவ்வாய்வு அமைகின்றது.

## கற்புநெறி

"கற்பு" என்ற சொல்லுக்கு ஒழுக்கம் என்பது பொருள். இந்நெறியைப் பெண்களுக்கு மட்டும் இலக்கியம் புகுத்தியிருக்கிறது. 19ஆம் நூற்றாண்டில் தோன்றிய பாரதியார்,

கற்பு என்பதை, "ஆணுக்கும் பெண்ணுக்கும் அதை பொதுவில் வைப்போம்" என்று கூறுகிறார். ஆனால் நாலடியார், ஒரு பெண் எந்த சூழ்நிலையிலும் கற்பு நெறியைத் தவறாமல் பின்பற்றி நடக்க வேண்டும் என்பதை,

**"நாலாறும் ஆறாய் நனிசிறிதாய் எப்புறனும்**
**மேலாறு மேலுறை சோரினும் மேலாய**
**வல்லாளாய் வாழும்ஊர் தற்புகழும் மாண்கற்பின்**
**இல்லாள் அமர்ந்ததே இல்".**

*(நாலடி-383)*

எனும் அடிகள், வீட்டின் நான்கு பக்கங்களும் இடிந்து மேலே மழைத்துளி வடிந்து வந்தாலும் அந்த வீட்டில் உள்ள பெண் தன் கற்பு நெறியுடன் பிறர் புகழும்படியாக இல்லறம் நடத்த வேண்டும் என்று கூறியுள்ளதைக் காணமுடிகிறது.

## நாணம்

நாணம் என்ற சொல்லுக்கு வெட்கப்பட வேண்டியதற்கு வெட்கித் தலைகுனிந்து நிற்றல். நாணம் என்ற பண்பு பெண்ணுக்கு வேண்டும் என்று தொல்காப்பியம் கூறுகிறது. அதுபோல் நாலடியாரும் நாணம் என்ற பண்பை குணநலனுடன் ஒப்பிடுகிறது. ஒரு பெண்ணுக்கு நாணம் என்ற பண்பு எல்லாவற்றிலும் சிறந்தது என்பதை நாலடியார் குறிப்பிடுகின்றது.

**"நாணுடையாள் பெற்ற நலம்"**

*(நாலடி-386:4)*

என்ற அடி பெண்ணுக்கு நாணம் என்ற குணம் இருந்தால் மற்ற எல்லா நலன்களையும் பெற்றுத் திகழ்வாள் என்று கூறுகின்றது. இக்கருத்தின் மூலம் நாணம் என்ற பண்பு பெண்ணுக்குத் தேவை என்பதை வலியுறுத்துவதை அறிய முடிகிறது.

## இளமை நிலையாமை

பதினெண் கீழ்க்கணக்கு அற நூல்கள் யாவும் அறக்கருத்துக்களை வலியுறுத்துவதோடு நிலையாமைக் கருத்துக்களையும் வலியுறுத்துகிறது. பெண்ணைத் தாழ்வாகக் கூறும்வகையிலும்இளமைநிலையாமையை எடுத்துக் கூறும் வகையிலும் பெண்ணின் அழகைக் கூறி ஆடவர்கள் அணுகக் கூடாது என்ற வகையிலும் கூறியுள்ளதைக் காணப்படுகிறது.

**தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டூன்றா**
**வீழா இறக்கும் இவள்மாட்டும் - காழிலா**
**மம்மர்கொள் மாந்தர்க் கணங்காகும் தன்கைக்கோல்**
**அம்மனைக்கோல் ஆகிய ஞான்று.**

*(நாலடி-14)*

என்ற பாடல் பெண் என்பவள் முதுகு தாழ்ந்து, உடம்பின் கட்டுத்தளர்ந்து, தலைநடுங்கி, கையில் தடி ஊன்றி, விழுந்து இறக்கப்போகும் முதிய நிலையில் இவள் மேல் கொண்டுள்ள அறிவற்றவரின் காம மயக்கத்தை, இவள் இப்போது பிடித் திருக்கும் ஊன்றுகோல் அவள் தாய் ஊன்றுகோல் பிடித்திருக்கும் வயதில் இவள் இளமையோடு கூடிய அழகுடன் காமத்தன்மை பெற்றிருப்பாள். எனவே இளமை நிலையாமையை உணர்ந்து பெண்ணை விரும்பும் செயலைக் கைவிடுக என்று குறிப்பிட்டுள்ளது. மனித உயிர்களில் பருவ மாற்றம் என்பது இயல்பானது. பெண்ணை விரும்புதல் கூடாது என்று வெளிப்படையாக கூறியிருக்கலாம். இளமை நிலையில்லாதது என்பது ஆண், பெண் இருவருக்கும் உரியது. அதை பெண்ணின் மேல் மட்டும் ஏற்றிக் கூறுவது, அவளைத் தாழ்த்திக் கூறுவதுபோல் அமைந்து ள்ளது நோக்கத்தக்கது. இச்செய்தி நாலடியார் - 17ஆம் பாடலிலும் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## வெற்றி

ஆணின் வெற்றியையும் பெண்ணின் வெற்றியையும் ஒப்பிட்டு இகழக் கூடிய நிலையை நாலடியாரில் காண முடிகின்றது. தழை அலைகள் சிதைக்கின்ற கடற்கரைச் சோலையையுடைய குளிர்ந்த துறைவனே, ஒருவர் மேற்கொண்ட காரியம் ஊழ்வினையால் கூடி வரவில்லை என்றாலும் அச்செயலில் தளராமல் முயல்வதே ஆடவர்க்குரிய ஆண்மைப் பண்பாகும். ஊழ்வினையால் கூடி வருமாயின் பெண் மக்களும் அதனை முடித்து பெருமையடைவர்.

**இசையா தெனினும் இயற்றியோ ராற்றால்**
**அசையாது நிற்பதாம் ஆண்மை - இசையுங்கால்**
**கண்டல் திரையலைக்குங் கானலந் தண்சேர்ப்ப**
**பெண்டிரும் வாழாரோ மற்று.**

**(நாலடி-194)**

என்ற அடிகள் ஓர் ஆண் எக்காரணத்திலும் தன் வலிமையால் எளிதில் வெற்றி பெற முடியும் என்றும் பெண்ணின் வெற்றி என்பது ஊழ்வினையால் மட்டும் நிகழக்கூடியது என்ற இழிவான சிந்தனை காணப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது.

## குழந்தைப்பேறு

குழந்தைப்பேறு என்பது இன்றைய அறிவியல் உலகத்தில் இரண்டு பேர் சம்பந்தப்பட்டது (ஆண், பெண்) என்பது உண்மை. ஆனால் மனைவியாக வந்து வாய்த்தவள் மாட்சிமைப்பட்ட நல்ல குணங்களும் குழந்தை பாக்கியமும் இல்லாத வளாயிருந்தால் அவளை நீக்கி வைப்பது என்பது முடியாது. இல்வாழ்க்கை தானாகப் பெற்ற துன்பம் என்பதை,

**“மாண்ட குணத்தொடு மக்கட்பே றில்லெனினும்**
**புண்டான் கழிந்தற் கருமையால்”**

**(நாலடி-56:1-2)**

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

## கணவனை வருத்தக்கூடியவள் பெண்

கணவனுக்கு எதிரே பேசக்கூடாது. விடியற்காலையில் சமையலறைக்குள் நுழைய வேண்டும். சமைத்த உணவை பரிமாற வேண்டும். இம்மூன்றையும் செய்தால் அவள் பெண். இல்லையென்றால் பேயை நிகர்த்தவள். கணவனைக் கொல்லும் ஆயுதத்திற்குச் சமமானவள் என்பதை,

**எறியென் றெதிர்நிற்பாள் கூற்றம் சிறுகாலை**
**அட்டில் புகாதாள் அரும்பிணி - அட்டதனை**
**உண்டி உதவாதாள் இவ்வாழ்பேய் இம்மூவர்**
**கொண்டானைக் கொல்லும் படை.**

**(நாலடி.363)**

என்ற பாடலில் பெண்ணுக்கு என்ற சில வரையறைகள் அல்லது கட்டமைப்பை உருவாக்கியிருக்கிறது என்று கூறுலாம். மனைவி என்பவள் வெளியில் செல்லாமல் இல்லறப் பணிகளை மட்டும் செய்ய வேண்டும். தன் இல்லறப் பணியை

*காலைப்பொழுதே தொடங்கிவிட வேண்டும் என்ற வரையறையைக் காணமுடிகிறது.*

### விருந்தோம்பல்

*விருந்தோம்புதல் தமிழரின் தலைசிறந்த பண்பாகக்கருதப்படுகிறது. விருந்தோம்பலை இல்லறத்தாரின் முக்கியக் கடமையாக இலக்கியங்கள் பதிவு செய்கின்றன. இல்லறக் கடமைகளை ஆற்றுவதில் பெண்கள் முன் நிற்பதால் விருந்தினர்களை உபசரித்தல் பெண்களுக்கான கடமைகளாகக் கருதப் படுகிறது. விருந்தோம்புதல் பெண்களின் சிறந்த பண்பு என்பதை,*

> ***"விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும் பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்"***
>
> ***(தொல்.பொருள்.1098)***

*என்ற தொல்காப்பிய நூற்பாவழி அறிய முடிகின்றது. விருந்தினரைப் பாதுகாத்தல், சுற்றத்தாரைக் காத்தலும் பெண்ணின் பண்புகளாகக் கூறுகிறது.*

*மனைவி என்பவள் இல்லறத்தின் கடமையாகக் கருதப்படும் விருந்தோம்பல் முறையைப் பின்பற்ற வேண்டும். கற்பொழுக்கமுடைய அயிராணி (இந்திராணி) தேவரின் மனைவிபோல வாழ்கின்ற பெரிய புகழ்வாய்ந்த மகளிராக இருந்தாலும் விருந்தோம்பல் முறையைப் பின்பற்றுதல் இன்றியமையாதது என்பதை,*

> ***"அரும்பெற்று கற்பின் அயிராணி யன்ன***
> ***பெரும்பெயர்ப் பெண்டி ரெனினும் - விரும்பிப்***
> ***பெறுநசையாற் பின்னிற்பா ரின்மையே பேணும்***
> ***நறுநுதலாள் நன்மைத் துணை."***
>
> ***(நாலடி.381)***

*என்ற பாடல் விளக்குகிறது.*

*ஒருபெண் வறுமையில் வாடும்போது, தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை உபசரிப்பது அவளின் கடமை என்று நாலடியார் கூறுகின்றது. குடத்துத் தண்ணீரைக் காய்ச்சி உண்ணுகின்ற வறுமை வந்த காலத்திலும் கடல் தண்ணீரைக் குடித்தாலும் பசிதீராத உறவினர்வந்தாலும்அவர்களைஉபசரிக்கும் கடமையைச் சிறப்பாக மேற்கொள்கின்ற மென்மையான சொற்களைப் பேசக்கூடிய பெண்ணே வாழ்க்கைக்கு உரிய மாட்சிமை பொருந்தியவள் ஆவாள் என்பதை,*

> ***"குடநீர்அட் டுண்ணும் இடுக்கண் பொழுதும்***
> ***கடல்நீர் அறவுண்ணும் கேளிர் வரினும்***
> ***கடன்நீர்மை கையாறாக் கொள்ளும் மடமொழி***
> ***மாதர் மனைமாட்சி யாள்."***
>
> ***(நாலடி.382)***

*என்ற செய்யுள் விளக்குகின்றது.*

### மனைவி இல்லா வீடு பாழ்மனை

*மனைவி என்பவள் குடும்பத்தின் அடிப்படைத் தேவையை நிறைவு செய்பவளாக ஆணிவேராக நின்று குடும்பத் தேவைகளை நிறைவுசெய்கிறாள். இதனை,*

> ***மாண்ட மனையாளை யில்லாதான் இல்லகம்***
> ***காண்டற்கு அரியதோர் காடு***
>
> ***(நாலடி 361:3-4)***

*என்ற அடிகள் மனைவி இல்லாத வீடு காண்பதற்கு கொடிய காடாகும் என்று கூறுகிறது.*

### கல்வி

*கல்வியின் சிறப்பை பல இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. நாலடியாரிலும் ஒரு அதிகாரம் இடம்பெற்றுள்ளது. இவ்வதிகாரத்தில்,*

> ***"குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்***
> ***மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து***
> ***நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்***
> ***கல்வி அழகே அழகு."***
>
> ***(நாலடி.131)***

*தலைமுடியின் அழகும் வளைந்து உடுக்கப்படும் ஆடையின் கரையழகும், மஞ்சள் நிறத்தின் அழகும் மக்களுக்கு அழகல்ல நாம் நல்முறையில் வாழ வழிவ குக்கும் கல்வியின் அழகுதான் சிறந்த அழகு என்று குறிப்பிட்டுள்ளது. இச்செய்யுள் ஆண், பெண் என்று பாராமல் பொதுவாக மக்களுக்குரிய கல்வியழகை குறிப்பிட்டுள்ளதை நோக்க முடிகிறது.*

நாலடியாரில் பெண்ணை இகழ்ந்துரைக்கக் கூடிய வகையில் கருத்துக்கள் அமைந்து ள்ளதைக் காணமுடிகின்றன. பெண் என்பவள் பேயாகவும் நஞ்சாகவும் துன்பம் தருபவளாகவும் இகழ்ந்துரைக்கப்பட் டுள்ளதைக் காணமுடிகிறது. துன்பம் தரும் பெண்ணின் இயல்புகளை நாலடியார் குறிப்பிடினும், கல்வியின் சிறப்பைப் பற்றி கூறும்போது பெண் என்பவள் ஆணுக்கு இணையாகப் பொதுவில் குறிப்பிட்டுள்ளதைப் பார்க்கமுடிகிறது. பெண் அனைவரின் தேவைகளையும் நிறைவுசெய்ய வேண்டும் என்ற வகையில் நாலடியார் பெண்ணை கட்டமைத் திருப்பது நோக்கத்தக்கது.

**பார்வை நூல்கள்**

1. ஜைன முனிவர்கள், நாலடியார் மூலமும் செம்பூர் வித்வான் வீ. ஆறுமுகம் இயற்றிய விரிவுரையும், தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு, சூலை, 2013.
2. கவிஞர் பத்மதேவன் (உரை), நாலடியார் (மூலமும் உரையும்), கற்பகம் புத்தகாலயம், சென்னை-17.
3. தமிழவன், அமைப்பியலும் அதன் பிறகும், அடையாளம், புத்தாநத்தம், 2ஆம் பதிப்பு, 2008.
4. ஆ. ஆலிஸ், கட்டமைப்பு ஆய்வில் அகநானூறும் புறநானூறும், அன்னம் (பி) லிட். சிவகங்கை, 1991.
5. பாரதியார், பாரதியார் கவிதைகள், பூம்புகார் பதிப்பகம், சென்னை, 11ஆம் பதிப்பு, 2014
6. இளம்புரணர் (உரை), தொல்காப்பியம் பொருளதிகாரம், கற்பியல் நூ.96